## கறைபடாத தங்கள் பல்லாண்டு பணிக்காலத்தை நிறைவு செய்து

# ஓய்வு பெற்றுள்ள இறையன்பு - சைலேந்திரபாபுக்கு பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, ஜூலை 2-
தலைமைச் செயலாளராக இருந்து இறையன்பு ஐ.ஏ.எஸ். அவர்களும், டி.ஜி.பி.யாக இருந்து சைலேந்திர பாபு ஐ.பி.எஸ். அவர்களும் நேற்று ஓய்வு பெற்றுள்ளது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் கறைபடாத தங்கள் பல்லாண்டு பணிக்காலத்தை நிறைவு செய்து இன்று ஓய்வு பெற்றுள்ள இறையன்பு ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும், சைலேந்திர பாபு ஐ.பி.எஸ். அவர்களுக்கும் மனமார்ந்த பாராட்டுகள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**கறைபடாத தங்கள் பல்லாண்டு பணிக்காலத்தை நிறைவுசெய்து இன்று ஓய்வுபெற்றுள்ள இறையன்பு ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும் சைலேந்திர பாபு ஐ.பி.எஸ் அவர்களுக்கும் நமது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவிப்போம். சிறந்த அதிகாரிகளான இவ்விருவரும் மாறாத அர்ப்பணிப்புணர்வுடன் தமிழ்நாட்டுக்காகப் பணியாற்றியுள்ளனர். அவர்களது அணுகுமுறையும் சலியா முயற்சிகளும் பல நல் மாற்றங்களைக்கொணர்ந்ததோடன்றி, நிர்வாகத்திலும் மிக ஆழமான தாக்கத்தைச் செலுத்தி, இளம் அதிகாரிகளுக்கு ஊக்கமாக விளங்குகின்றன.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# மருத்துவர்கள் நலனுக்கான அனைத்தையும் கழக அரசு செய்து கொடுக்கும்!

## தேசிய மருத்துவர்கள் நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஜூலை 2-
நேற்று தேசிய மருத்துவர்கள் நாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், "மருத்துவர்கள் நலனுக்கான அனைத்தையும் கழக அரசு செய்து கொடுக்கும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

தேசிய மருத்துவர்கள் நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**தன்னலம் கருதாது உலகத்து உயிர்களின் உடல்நலனும் உள்ள நலனும் காக்கும் மருத்துவர்கள் அனைவருக்கும் மருத்துவர்கள் நாள் வாழ்த்துகள்!**




**மருத்துவர்கள் நலனுக்கான அனைத்தையும் கழக அரசு செய்து கொடுக்கும்.**

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# அரசியல் கட்சி எல்லைகள் கடந்து அனைவரிடமும் அன்பு பாராட்டுபவர்!

## முன்னாள் இந்திய குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!



**சென்னை, ஜூலை 2-
இந்திய குடியரசு முன்னாள் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு அவர்களின் பிறந்த நாளையொட்டி, அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து வலைதளங்களில் வெளியிட்ட செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் "அரசியல் கட்சி எல்லைகளைக் கடந்து அனைவரிடமும் நட்பு பாராட்டுபவர்!" என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

முன்னாள் இந்திய குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு அவர்களின் பிறந்த நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-

**முன்னாள் குடியரசுத் துணைத் தலைவர் எம். வெங்கையா நாயுடு அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துகள்.**

**அரசியல் கட்சி எல்லைகளைக் கடந்து அனைவரிடமும் நட்பு பாராட்டும் உங்கள் திறத்துடன், தங்களது சொல் நயமும், ஈர்ப்பும் எப்போதும் ஒளிவீசிக் கொண்டு இருந்து வந்துள்ளது.**

**இந்தச் சிறப்பான நாளில் தாங்கள் நல்ல உடல்நலத்துடனும் மகிழ்ச்சியுடனும் திகழ விழைகிறேன்.**

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை 2023:

# களம் காத்திருக்கிறது - சாதனைகள் பல படைத்திடுங்கள்!

## தமிழ்நாடு விளையாட்டு வீரர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூலை.2–
மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை – 2023 விளையாட்டுப் போட்டிகள் தொடங்கியதையொட்டி தமிழ்நாடு வீரர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவில் வாழ்த்தி உள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

**களம் காத்திருக்கிறது. சாதனைகள் பல படைத்திடுங்கள் தமிழ்நாட்டு வீரர்களே!**

**உங்களை வாழ்த்த வெற்றிக் கோப்பைகளைத் தந்து, நீங்கள் எல்லைகள் கடந்து சாதனைச் சிகரங்களைத் தொடுவதைக் காண ஆவலாய் இருக்கிறேன்!**

**களம் நமதே!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# அமைச்சரை பதவி நீக்கும் அதிகாரம் ஆளுநருக்கு இல்லை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆளுநருக்கு கடிதம் ... முதல் பக்கத் தொடர்ச்சி

“100. எனவே, சட்டப்பிரிவு 75(1) ஐ விளக்கும் போது, நிச்சயமாக தகுதியிழப்பை சேர்க்க எமுடியாது. இருப்பினும், அமைச்சர்கள் குழுவில் ஒரு அமைச்சரின் பங்கு மற்றும் அவர் ஏற்ற சட்டப்படியானஉறுதிமொழியின்புனிதத்தைக் கருத்தில் கொண்டு, பிரதமர், அவர் மீது வைத்திருக்கும் நம்பிக்கைக்கு இணங்கும் அதே வேளையில், கொடுமையான அல்லது கடுமையான கிரிமினல் குற்றங்கள் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்ட குற்றவியல் பின்புலங்களைக் கொண்ட ஒருவரை அமைச்சராக தேர்வு செய்யக் கூடாது என்று அவர் தீர்மானம் செய்வார். இதைத்தான் அரசியல் சாசனம் அவரிடம் பரிந்துரைக்கிறது.

**பிரதமருக்குரியவை முதலமைச்சருக்கும் பொருந்தும்!**

அதுவே பிரதமரிடமிருந்து அரசியலமைப்பு ரீதியாக எதிர்பார்க்க முடியும். மற்றவற்றை பிரதமரின் நிலைப்பாட்டுக்கேற்ப விடப்பட வேண்டும். நாங்கள் அதிகமாவோ அல்லது குறைவாகவோ இந்த விஷயத்தில் எதுவும் கூறவில்லை.

101. இந்த நிலையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 164(1) வது பிரிவில் பயன்படுத்தப்பட்டுள்ள மேற்கண்ட மொழியின் அடிப்படையில், பிரதமருக்கு குறிப்பிடப்பட் டுள்ளவை முற்றிலும் முதல மைச்சரு க்கும் பொருந்தும் என்பதை நாங்கள் இங்கே தெரிவித்தே ஆக வேண்டும்.

எனவே, இந்திய உச்ச நீதிமன்றத்தின் அரசியலமைப்பு அமர்வு, ஒருவர் தனது அமைச்சரவையில் அமைச்சராக நீடிக்கலாமா வேண்டாமா என்று முடிவெடுப்பதை பிரதமர் மற்றும் முதலமைச்சரின் நிலைப்பாட்டுக்கே விடப்பட்டது. எனவே, ஒரு விசாரணை முகமை ஒருவருக்குஎதிராகவிசாரணையைத் தொடங்கிய காரணத்தால், அவர் அமைச்சராகத் தொடர சட்டரீதியாக பொருத்தமற்ற நபராக ஆக மாட்டார்.

**குற்றச் சாட்டை மட்டுமே வைத்து தகுதிநீக்க முடிவு பொருத்தமற்றது!**

மாண்பமை இந்திய உச்ச நீதிமன்றத்தின் 16.05.2023 தேதியிட்ட தீர்ப்பில் ஒய். பாலாஜி மற்றும் கார்த்திக் தேசராய், SLP (Crl.) எண்.12779 12781 2022 இன் படி, நான் விசாரணையை வழிநடத்தும் தீர்ப்பில் நீதிமன்றங்களால் செய்யப்பட்ட ஆய்வுகளின் ஆதார மதிப்பு பற்றி ஏற்கனவே விரிவாக விளக்கியுள்ளேன். அந்த வகையில் ஒரு அமைச்சரை தகுதி நீக்கம் செய்ய, அவர் மீதான குற்றச்சாட்டுகளை மட்டுமே வைத்து முடிவு செய்வது என்பது பொருத்தமற்ற முடிவாகும்.

வருமான வரித்துறை அதிகாரிகள் மீதான தாக்குதல் மற்றும் இதர தொடர்புடைய சம்பவங்கள் தொடர்பாக, வழக்குகள் பதிவு செய்யப்பட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உங்களுடைய குற்றச்சாட்டுகளின்படி விசாரணை அதிகாரிகளால் நீதிமன்ற உத்தரவுப்படி சட்டத்தை நிலைநாட்டும் பணியில் அவர்களுக்கு இடையூறு அளிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த வழக்கின் விசாரணையில் வி. செந்தில் பாலாஜி தலையிடக்கூடும் என்ற உங்கள் அச்சம் அடிப்படை மற்றும் ஆதாரம் இல்லாதது.

**அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீதான வழக்கில் மவுனம் ஏன்?**

மேலும், வி. செந்தில்பாலாஜி குறித்து ஐந்து பக்க கடிதம் எழுதியுள்ள நிலையில், அ.தி.மு.க அரசின் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முன்னாள் அரசு ஊழியர்கள் மீது விசாரணை நடத்த அனுமதி அளிக்க வேண்டும் என்ற எனது அரசின் கோரிக்கைக்கு, தொடர்ச்சியாக, மர்மமான மவுனம் காத்து வருகிறீர்கள்.

அப்படிப்பட்ட எங்கள் கோரிக்கைகள் தங்கள் அலுவலகத்தில் மலிந்து கிடைக்கின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டியது எங்கள் கடமை. குட்கா வழக்கில் சிபிஐ வழக்குப்பதிவு செய்ய அனுமதி கோரியும் உங்களால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உண்மையில், இவ்வாறான செயல்கள் உங்களது ஆரோக்கியமற்ற ஒரு பக்க சார்பு என்பது மட்டுமன்றி, இந்த இரட்டை நிலைகளுக்குப் பின்னால் உள்ள உங்கள் உண்மையான நோக்கத்தையும் காட்டுவதாக உள்ளன.

வரம்பு கடந்த வார்த்தைப் பிரயோகம் குறித்த உங்கள் குற்றச்சாட்டுகளுக்கு எங்கள் பதில் என்னவென்றால், தமிழ்நாடு அரசு எப்போதும் உங்களுக்கும் உங்கள் அலுவலகத்துக்கும் உரிய மதிப்பையும், மரியாதையும் அளித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்களது தமிழ் கலாச்சாரத்திற்கு ஏற்ப நாங்கள் எப்போதும் உங்களிடம் இனிமையாகவும், மரியாதையாகவும், மதிப்புடனும் நடந்து கொண்டிருக்கிறோம். இருப்பினும், அதனால் நீங்கள் அளித்த அரசியலமைப்பிற்கு முரணான உத்தரவுகளுக்கு நாங்கள் கட்டுப்பட வேண்டும் என்பது அதன் அர்த்தமல்ல.

**யார் அமைச்சராக இருக்க வேண்டும் என்பது முதலமைச்சரின் தனி உரிமை!**

அமைச்சரை நீக்குவது தொடர்பான அரசியலமைப்பு விதிகளை மீண்டும் ஒருமுறை இங்கே வலியுறுத்துகிறேன். சட்டப்பிரிவு 164(1)ன் கீழ், முதலமைச்சரின் வழிகாட்டுதலின் பேரில்தான் ஆளுநர் என்பவர் அமைச்சர்கள் நியமனத்தை செய்கிறார் அல்லது நீக்குகிறார். அந்த வகையில் அமைச்சரவையில் யார் இடம்பெற வேண்டும், யார் இடம் பெறக்கூடாது என்பதை முடிவு செய்யும் அதிகாரம் ஆளுநருக்கு இல்லை. அது முதலமைச்சரின் தனி உரிமை ஆகும். அரசமைப்பு சட்டப் பிரிவு 164(2)ன் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சர் மற்றும் அவரது அமைச்சரவைக்கு சட்டப் பேரவைக்கு மட்டுமே அமைச்சர்களை நியமிக்கும் பொறுப்பு உள்ளது.

**செந்தில் பாலாஜி அமைச்சராக நீடிப்பார்!**

எனவே, வி. செந்தில் பாலாஜியை நீங்கள் நீக்கம் செய்த நிலையில் எனது அமைச்சர்களை நீக்க உங்களுக்கு எவ்விதமான அதிகாரமும் இல்லை என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சருக்கு அது மட்டுமே தனி உரிமையாக உள்ளது.

எனது ஆலோசனையின்றி எனது அமைச்சரை பதவி நீக்கம் செய்தது அரசியலமைப்புச் சட்டத்திற்கு புறம்பானது மற்றும் சட்டத்திலும் இல்லாதது என்பதால் அது புறக்கணிக்கப்பட்டதாக உள்ளது.

இவை யாவும் தங்களது மேலான பதிவு மற்றும் தகவலுக்காக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு ஆளுநர் ரவிக்கு எழுதிய கடிதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

**செந்தில்பாலாஜி குறித்து ஐந்து பக்க கடிதம் எழுதியுள்ள நிலையில், அ.தி.மு.க அரசின் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முன்னாள் அரசு ஊழியர்கள் மீது விசாரணை நடத்த அனுமதி அளிக்க வேண்டும் என்ற எனது அரசின் கோரிக்கைக்கு, தொடர்ச்சியாக, மர்மமான மவுனம் காத்து வருகிறீர்கள். அப்படிப்பட்ட எங்கள் கோரிக்கைகள் தங்கள் அலுவலகத்தில் மலிந்து கிடைக்கின்றன என்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டியது எங்கள் கடமை. குட்கா வழக்கில் சிபிஐ வழக்குப்பதிவு செய்ய அனுமதி கோரியும் உங்களால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. உண்மையில், இவ்வாறான செயல்கள் உங்களது ஆரோக்கியமற்ற ஒரு பக்க சார்பு என்பது மட்டுமன்றி, இந்த இரட்டை நிலைகளுக்குப் பின்னால் உள்ள உங்கள் உண்மையான நோக்கத்தையும் காட்டுவதாக உள்ளன.**

## தூத்துக்குடி மாவட்ட தீப்பெட்டி ஆலையில் தீவிபத்து:

# உயிரிழந்த குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூலை 2–
தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், சித்திரம்பட்டி கிராமத்தில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான தீப்பெட்டித் தொழிற்சாலையில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தீவிபத்தில் திருமதி.மாரியம்மாள், க/பெ.தங்கவேல் (லேட்) (வயது 70) என்பவர் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன்.

மேலும் இவ்விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திருமதி. கனகராஜேஸ்வரி, க/பெ.காட்டுராஜா (லேட்) (வயது 49) என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க அறிவுறுத்தியுள்ளேன்.

உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவருக்கு ஐம்பதாயிரம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## திருச்சி தெற்கு மாவட்டத்தில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!



## மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

(ஜூன் – 2023 - ஜூன் 2024)

(ஜூலை மாத நிகழ்வுகள் 2023)

| தேதி – நேரம் | நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சி ஏற்பாடு | தலைமை | சிறப்பு அழைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 02/07/23 மாலை 6.00 மணி | கலைஞர் அவர்களின் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் - 59,59A கலைஞர் நகர் பகுதி | ஜெ.கணேச மூர்த்தி, என்.ராஜேந்திரன், வட்ட கழக செயலாளர்கள் | ஆரணி மாலா தலைமை கழக பேச்சாளர் |
| 05/07/23 காலை 10.00 மணி | மாநகராட்சி துப்புரவு பணியாளர்கள் 100 நபர்களுக்கு சீருடை வழங்கும் விழா | மாநகர துணை செயலாளர் | ஆ.சந்திர மோகன் | மு.மதிவாணன் மாநகர செயலாளர் |
| 08/07/23 மாலை 6.00 மணி | டாக்டர் கலைஞர் அவர்களின் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் - 14,14A மலைக்கோட்டை பகுதி | ம.இளங்கோ, அ.உதயா ரபி, வட்ட கழக செயலாளர்கள் | கந்திலி கரிகாலன் தலைமை கழக பேச்சாளர் |
| 09/07/23 காலை 10.00 மணி | மாவட்டத்தில் அரசு பள்ளிகளில் படித்து முதல் 10 இடங்களை பிடித்த 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு கல்வி உதவி தொகை வழங்கும் விழா | மாநகர கழக பொருளாளர் | மா.தமிழ்செல்வன் | மு.மதிவாணன் மாநகர செயலாளர் |
| 15/07/23 மாலை 6.00 மணி | திருக்கோவில் நலிந்த பூசாரிகள் மற்றும் குருக்கள் 100 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் | மாவட்ட அவைத்தலைவர் | என்.கோவிந்தராஜ், | மாவட்ட கழக செயலாளர் |
| 16/07/23 மாலை 6.00 மணி | 9 ஊராட்சிகளிலும் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கல்வெட்டு அமைத்து கொடியேற்றும் விழா | வையம்பட்டி வடக்கு ஒன்றியம் | ஆர்.ஸ்ரீரங்கன் ஒன்றிய செயலாளர் | மாவட்ட கழக செயலாளர் |
| 22/07/23 மாலை 6.00 மணி | விவசாய தொழிலாளர்களை அழைத்து விவசாயத்திற்கு தேவையான உபகரணங்கள் வழங்குதல் | மாவட்ட, மாநகர விவசாய தொழிலாளர் அணி | ஆ.ஜெகதீசன் மாவட்ட அமைப்பாளர் கோ.வி.நாகராஜன் மாநகர அமைப்பாளர் | திரு.அன்னியூர் சிவா மாநில செயலாளர் |
| 23/07/23 மாலை 6.00 மணி | மணப்பாறை ஒன்றியத்தில் தலைவர் கலைஞர் அவர்களுக்கு புகழ் சேர்க்கும் பொதுக்கூட்டம் | மணப்பாறை ஒன்றியம் | சி. ராமசாமி ஒன்றிய கழக செயலாளர் | மாண்புமிகு எஸ். ரகுபதி அவர்கள் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் சட்டத்துறை அமைச்சர் |
| 30/07/23 மாலை 6.00 மணி | தலைவர் கலைஞர் அவர்களின் புகழ் சேர்க்கும் நூற்றாண்டு விழா பொதுக்கூட்டம் | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | கே.எஸ்.எம்.கருணாநிதி ஒன்றிய கழக செயலாளர் | மாண்புமிகு மனோ.தங்கராஜ் அவர்கள் கன்னியாகுமரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் ஆவின் மேம்பாட்டுத்துறை அமைச்சர் |
| 31/07/23 மாலை 6.00 மணி | கலைஞர் அவர்களின் புகழ் சேர்க்கும் தெருமுனை பிரச்சாரம் | வார்டு எண் - 33,33A பாலக்கரை பகுதி | மா.கோவிந்தராஜன், பி.சி.எடிங்டன், வட்ட கழக செயலாளர்கள் | துரை காசிநாதன் தலைமை கழக பேச்சாளர் |

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.